செ.வெ.எண்.45 நாள்.24.03.2021

தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூரில் 100 சதவீத வாக்களிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர்.கி.செந்தில்ராஜ்,இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து பங்கேற்றார்.

------------------------------

தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூரில் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் மற்றும் மகளிர் திட்டத்தின் சார்பில் 100 சதவீத வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று (24.03.2021) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர்.கி.செந்தில்ராஜ்,இ.ஆ.ப. கலந்து கொண்டு வழிப்புணர்வு ரங்கோலி கோலத்தினை பார்வையிட்டார். மேலும் வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் வாக்காளர் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் மாதிரி வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் வாக்குப்பதிவு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மகளிர்களுக்கு பயிற்சி அளித்தார். தொடர்ந்து வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இன்று ஆத்தூர் பகுதியில் மகளிர் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் மூலம் விழிப்புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி ஏற்பு உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. மேலும் வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்து வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும் VV PAD மூலம் தாங்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்துகொள்ளும் வசதி குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வாக்காளர்கள் மனசாட்சியின்படி வாக்களித்து கடமையற்ற வேண்டும். வாக்களிப்பது நமது கடமை மற்றுமின்றி உரிமையாகும். நமக்கும் நாட்டிற்கும் நல்லது எது என்பதை அனைவரும் சுய பரிசோதனை செய்து கொண்டு தவறாமல் வாக்களிக்க வேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.தனப்பிரியா, மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திரு.பிச்சை, துணை ஆட்சியர் பயிற்சி திரு.சதீஷ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வெ.சீனிவாசன், புத்தாக்க திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.வேல்முருகன், திருச்செந்தூர் வட்டாட்சியர் திரு.முருகேசன், ஆத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ரங்கசாமி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் திரு.சாமத்துரை, திருமதி.மல்லிகா மற்றும் மகளிர் சுய உதவி குழுவை சேர்ந்த மகளிர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி